ஒக்டோபர் 20, 2020

**இலங்கை: கோவிட்-19 பொறுப்புடைமையின் இராணுவமயமாக்கலுக்கான விலையை எளிதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் செலுத்துகின்றன.**

*சர்வதேச ஜூரர்கள் ஆணையம் (International Commission of Jurists), ஆசிய மற்றும் பசுபிக் திட்டத்தின் சட்ட ஆலோசகர் போரம் ஜங் என்பவரின் ஓர் கருத்துப் பகுதி.*

மினுவாங்கொட பகுதியிலுள்ள ப்ரன்டிக்ஸ் பேசன் வெயார் பக்டரியில் பணியாற்றுகின்ற நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு கோவிட்-19 பரிசோதனையில் தொற்று உறுதியானமையைத் தொடர்ந்து 15 ஒக்டோபர் 2020 அன்று இலங்கை அதிகாரிகள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் (KFTZ) பகுதிகளுக்கு ஊரடங்கு உத்தரவை விதித்தனர். ஒக்டோபர் 9 அன்றிலிருந்து, குறித்த ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய 1500 க்கும் மேற்பட்ட மக்கள் கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு உள்ளானதுடன் சீப்.ஃவே கட்டுநாயக்க, நெக்ஸ்ட் மனுபக்சரிங், நய்கய் மற்றும் ஒகாயா லங்கா ஆகிய நான்கு தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

KFTZஇன் பல தொழிலாளர்கள் இலங்கையிலுள்ள கிராமப் பகுதிகளிலிருந்து இடம்பெயருவதுடன், அவர்கள் மிகவும் குறைந்த வசதிகளைக் கொண்ட அதிக நெருக்கடியான தங்கும் விடுதிகளில் வசிக்கின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தமது பிள்ளைகளைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கும் இவ் விடுதிகளில் சில இடமளிக்கின்றன. கோவிட்-19 தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தும் ஓர் முயற்சியில், ஒக்டோபர் 11 அன்று இராணுவம் அழைக்கப்பட்டு, நள்ளிரவு மற்றும் அதிகாலையில் தொழிலாளர்களைச் சுற்றிவளைத்து, அவர்களைத் தற்காலிக தனிமைப்படுத்தும் மையங்களுக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டனர். ஊடக மற்றும் சிவில் சமூக அறிக்கைகளின்படி, தொழிலாளர்கள் தமது உடமைகளை எடுத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு ஐந்து தொடக்கம் பத்து நிமிடங்கள் மாத்திரமே உள்ளதாகக் குறிப்பிட்டது மட்டுமல்லாது அவர்களது தங்கும்விடுதி அறைகளை இராணுவ வீரர்கள் சோதனையிட்டுள்ளனர். தொழிலாளர்கள் நெருக்கடியான பேரூந்துகளில் ஏற்றப்பட்டதுடன் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைகளுக்கு அமைவாக நிறுவப்பட்டிராத நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையின் போது குறித்த தனிமைப்படுத்தல் நிலையம் எங்கே காணப்படுகின்றது என்பதை தொழிலாளர்களுக்கு அறிவிக்கவோ அவர்களுக்கு பாதுகாப்பு முகக்கவசங்களை வழங்கியிருக்கவோ இல்லை என்பதை தொழிற் சங்கங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் கூறியிருந்தனர். அவர்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்படவே இல்லை என்பதுடன் பிள்ளைகள் அவர்களது தாய்மார்களிடமிருந்து பிரிக்கப்பட்டனர். தொழிலாளர்கள் குறித்த நிலையத்தை அடைந்த போது, அவர்களுக்கு உண்பதற்கு தகுதியற்ற உணவு வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது. குறித்த நிலையமானது சுத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை, கழிப்பறைகள் அடைப்பட்டு சுகாதாரமற்றதாகவும் காணப்பட்டன என்பதுடன் தொழிலாளர்கள் அந்நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட போது அவர்களில் எவருக்கும் பொலிமரேஸ் செயின் ரியாக்சன் (PCR) பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சுருக்கமாக, தொற்றின் அச்சுறுத்தல் தொடர்பில் இராணுவம் தலைமையிலான பொறுப்புடைமையானது தொழிலாளர்களை அதிக தொற்று அச்சுறுத்தலுக்கும் அதேவேளை பல்வேறு அகௌரவங்களுக்கும் உட்படுத்தியதாக முடிந்துள்ளது.

இராணுவத்தினரின் பொருத்தமற்ற அல்லது கனமான நடத்தை தொடர்பில் நாம் மேலும் அதிகமாகக் கேள்விப்படுகின்றமையால், இப் பெருந்தொற்றின் பொறுப்புடைமைகள் மனித உரிமைகள் கோட்பாடுகளுடன் இணங்குவதை உறுதிசெய்தல் அவசியமாகின்றது. தொழிலாளர்களுக்கிடையிலான தற்போதைய நோய்ப்பரவலை இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவம் என்பன கையாண்டுள்ள விதம் கவலைக்குரியது. தொழிலாளர்களுக்கு தெளிவான தகவல் வழங்கப்படாமை, பாதுகாப்பற்ற போக்குவரத்து, சட்டரீதியான அடிப்படைகளின்றி நிறுவப்பட்ட

சுகாதாரமற்ற தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் தொழிலாளர்களைப் பேருந்துகளில் ஏற்றுவதற்கு முன்பாக மற்றும் நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட போது பரிசோதனைகள் மேற்கொள்ளத் தவறியமை மற்றும் நீதித்துறை மேற்பார்வை இல்லாமை என்பன அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட அடிப்படையான கோவிட்-19 ஒழுங்குவிதிகளின் மீறலாகும். இவ் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மத்தியில், பெரிதும் இராணுவமயமாக்கப்பட்ட மற்றும் அரசியல்மயமாக்கப்பட்ட கோவிட்-19 க்கான பொறுப்புடைமை அமைகிறது.

இலங்கையில் முதலாவது கோவிட்-19 தொற்றானது மார்ச் மாதத்தில் அறிக்கையிடப்பட்டது. இந் நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமானது, கோவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் (NOCPCO) என்பதைத் தாபித்தது. இருப்பினும், இம் மையத்திற்கான பொறுப்பதிகாரியாக ஓர் மருத்துவ நிபுணரையோ அல்லது சிவில் அதிகாரியையோ நியமிக்காது, ராஜபக்ச அரசாங்கமானது NOCPCO-யினுடைய தலைவராக, போர்க் குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா என்பவரைத் தெரிவுசெய்தது. 2009 இல் முடிவடைந்த, இலங்கையில் நீண்ட தசாப்தங்களாகக் காணப்பட்ட ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது கடுமையான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக பல்வேறு ஐ.நா விசாரணை அமைப்புகளினால் அடையாளங்காணப்பட்ட இலங்கை இராணுவத்தின் 58வது படைப்பிரிவினுடைய தளபதியாக சவேந்திர சில்வா காணப்பட்டார். ஜனாதிபதி ராஜபக்ச, ஓய்வுபெற்ற மற்றும் தற்போது இராணுவத்தில் பணியாற்றிவருகின்ற அதிகாரிகளை சுகாதார அமைச்சின் செயலாளர், பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் இயக்குநர் நாயகம் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் போன்றவை உள்ளடங்கலாக ஏனைய முக்கியமான பொதுத் துறைப் பதவிகளுக்கு நியமித்தார்.

பல வாரங்கள் தாமதத்திற்குப் பின்னர், மார்ச் 20 அன்று திடீரென நாடளாவிய ஊரங்கு உத்தரவு பிரகடனம் செய்யப்பட்டது. இதன் போது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளை வழங்குவதற்கான போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஊரடங்கு உத்தரவை மீறுகின்றமைக்கு மக்களைக் கைது செய்வதற்கான முழுமையான அதிகாரங்களையும் ஜனாதிபதி காவல்துறையினருக்கு வழங்கினார். ஊரடங்கு உத்தரவு மீறல் குற்றச் சாட்டுகையில் 60,000 க்கும் மேற்பட்ட மக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்களில் பெரும்பாலானோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டடுள்ள போதிலும், கோவிட்-19 பெருந்தொற்று முடிவடைந்ததும் நீதிமன்ற நடபடிமுறைகள் சாதாரணமாகத் தொடங்குகின்ற போது சட்டமா அதிபர் திணைக்களதத்தின் ஆலோசனையின் படி அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என காவல்துறை குறிப்பிட்டது. மீறுபவர்கள் மீது நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட முடியும் என்பதுடன் குற்றம் எண்பிக்கப்படின், ஆறு மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் ரூ. 2000 வரையிலான தண்டப்பணத்திற்கும் உட்படுத்தப்பட முடியும். புல பாராளுமன்ற உறுப்பினர் ஊரடங்கு உத்தரவின் சட்டபூர்வத் தன்மை தொடர்பில் வாதிட்ட போதிலும், அரசினுடைய கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுத் தந்திரோபாயத்தின் பகுதியாக, பல்வேறு பிரதேசங்களிலும் இது தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பொது சுகாதார நெருக்கடி போன்ற ஓர் அவசரகால நிலைமையின் போது இராணுவமானது சட்ட அமுலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஐ.நா மனித உரிமைகள் வழிகாட்டி, இராணுவமானது மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் மாத்திரமே ஓர் சட்ட அமுலாக்க நிலைமையில் பயன்படுத்தப்படலாமென குறிப்பிட்டுள்ளது. இராணுவத்தினர் சட்ட அமுலாக்கச் செயன்முறையை மேற்கொள்கின்ற போது, அவர்கள் சிவில் அதிகாரத்திற்குத் துணையாகவும் அத்துடன் குடியியல் சட்டத்தின் கீழ் பொறுப்புடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதுடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு ஏற்புடையதாகும் தராதரங்களுக்கும் உட்படல் வேண்டும்.

இருப்பினும், தற்போது இலங்கையில், கோவிட்-19 பொறுப்புடைமையின் போதான இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் எந்தவொரு பகிரங்கக் கலந்துரையாடலோ அல்லது வெளிப்படைத் தன்மையோ இல்லை. பொதுச் சுகாதார நெருக்கடியுடன் தொடர்புடைய அனைத்துத் தீர்மானங்களும் நீதித்துறை அல்லது

பாராளுமன்றத்தின் எந்தவொரு கண்காணிப்பும், இத் தீர்மானங்களை அறிவிக்கும் எந்தவொரு பொது நிறுவக நடபடிமுறைகளும் இல்லாது சவேந்திர சில்வாவினுடைய தலைமையின் கீழுள்ள NOCPCO வினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பொதுச் சுகாதார பொறுப்புடைமையின் இராணுவமயமாக்கலினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இன மற்றும் சமயக் குழுக்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகள் வடக்கு-கிழக்கில் இராணுவமயமாக்கலை இல்லாமலாக்குவதற்கு தொடர்ந்து அழைப்புவிடுத்து வருகின்றனர். பொதுச் சுகாதாரக் கொள்கையை மேற்பார்வையிடவும் அத்துடன் அரசின் முதல் பொறுப்புக்கூறுபவர்களாகவும் இராணுவத்தைக் கொண்டிருப்பது இராணுவ ஆக்கிரமிப்பினை இயல்பாக்குவதோடு, ஏற்கனவே காணப்படுகின்ற இனப் பிளவுகளை அதிகரிப்பதுடன், இலங்கையில் மனித உரிமைகளை மேலும் மோசமாக்குகின்றது.

பெரும்பாலான தனிமைப்படுத்தல் நிலையங்கள் தற்போதும் இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுக் காணப்படுகின்ற நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன.

ஏற்கனவே இன மற்றும் அரசியல் பதட்டங்களுக்கு உட்பட்டுள்ளதான பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்கின்றமை தொடர்பில் அப்பகுதி மக்களிடம் பதட்டம் காணப்பட்ட போதிலும், அரசாங்கமானது இவ் உள்ளூர் அக்கறைகளைப் புறக்கணித்ததுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை தனிமைப்படுத்தல் மையங்களாக மாற்றியது.

மேலும், வழிபடுவதற்கான அவர்களது சுதந்திரத்தின் மீதான மீறல்கள் தொடர்பில் இலங்கையிலுள்ள முஸ்லிம்கள், முறைப்பாடு செய்துள்ளனர். இஸ்லாமிய அடக்க நடைமுறைகள் மற்றும் உலக சுகாதார தாபனத்தின் (WHO) வழிகாட்டுதல்களுக்கு மாறாக, வைரஸ் தொற்றுக்கு உள்ளான பின்னர் மரணமடைந்த முஸ்லிம்களை அவசியமாகத் தகனம் செய்தலை அரசாங்கம் கட்டாயமாக்கியது.

பொது சுகாதார நெருக்கடியை எதிர்கொள்ள மனித உரிமைகள் மீதான சில மட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படலாம் எனினும், அத்தகைய மட்டுப்பாடுகள், சிராகுசா கோட்பாடுகளுக்கு (Siracusa Principles) இணங்க, சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகவும், பாரபட்சமற்றதாகவும், அத்தியாவசியமானதாகவும் அத்துடன் பொது சுகாதாரத்தைக் கையாளுவதற்கு நியாயமானதாகவும் ஓர் பொது சுகாதார நோக்கத்திற்காகவென இருத்தல் வேண்டும்.

பாராளுமன்ற மற்றும் குடியியல் மேற்பார்வையற்ற இலங்கை இராணுவத்தினரின் ஈடுபாடானது கடுமையான மனித உரிமைகள் மற்றும் சட்டவாட்சி தொடர்பான விசாரங்களை அதிகரிக்கின்றது. தீவிர நோய்ப் பரவலை நிர்வகிப்பதற்கான புள்ளிவிபரங்கள் மற்றும் தந்திரோபாயம் தொடர்பில் பொது சுகாதார அலுவலகர்கள் இராணுவ அதிகாரங்களுடன் உடன்பாடின்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசாங்கமானது, நோய்த் தொற்றின் பரவலுக்கான அதன் பொறுப்புடைமையின் கொள்கைகள் ஆதாரத்தின் அடிப்படையிலும், மனித உரிமைகளுக்கு இணங்கியதாகவும் அத்துடன் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் காணப்படுகின்ற போதே வெற்றிகரமான பொது சுகாதார நடவடிக்கைகளைச் செயற்படுத்த முடிவதுடன், மக்கள் ஆதரவு மற்றும் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும்.